# வணிகவியல் மேலாண்மை (நீதிமொழிகள் திருக்குறள் ஒப்பீடு)

**முனைவர்.ஜெ.மெரின் ஜெலின்டா**
**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை**
**சாராள்தக்கர் கல்லூரி திருநெல்வேலி7**

52

**ஆய்வுச்சுருக்கம்:**
தமிழ் மொழியில் பண்டைய காலந்தொட்டு பல்வேறு அறநூல்கள் தோன்றியுள்ளன. திருக்குறள் அறம் , பொருள், இன்பம் ஆகிய பகுப்புகளை கொண்டது இது அடிப்படையில் ஒரு வாழ்வியல் நூல். அறநெறிகளைப் பற்றிய உலகின் மிகச் சிறந்த படைப்புகளில் ஒன்றாக கருதப்படும். இந்நூல் பொதுத்தன்மையான கருத்துக்களைக் கொண்டுள்ளது. இது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. விவிலியம் கிறித்தவர்களின் புனிதல். இதில் இரு பிரிவுகள் அமைந்துள்ளன.அவை பழைய ஏற்பாடு , புதிய ஏற்பாடு. விவிலியம் பல தனி நூல்களின் தொகுப்பாகவும் தலைசிறந்த நூலாகவும் ; போற்றப்படுகின்றது. பழைய ஏற்பாட்டில் நீதிமொழிகள் என்ற நூல் அமைந்துள்ளது. திருக்குறள் , நீதிமொழிகள் நூல்களில் இடம் பெற்றுள்ள வணிகக்கருத்தினை ஒப்பீட்டு , கண்டறியதக்கதாகக்கட்டுரை அமைகின் ;றது.

திறவுச்சொற்கள்:-
ஊக்கம், நடுநிலைமை, அளவுகோல், பொருளாதாரம், சோம்பல்.

முன்னுரை:

உலகில் பழமையானதும் புகழ் வாய்ந்ததுமான நூல்களுள் ஒன்று விவிலியம். இது கிறி ;த்தவர்களின் புனித நூலாகும்.அனைத்த மக்களும் படித்துப் பயன்பெறும் நூலாக அமைகிறது. விவிலியம் அதிக அளவில் மொழிபெயர்க்கப்பட்ட நூல். தமிழர்களாலும் உலகத்தோராலும் போற்றப்படுவது. உலகப்பொதுமறை என்று போற்றப்படும் நூல் திருக்குறள். இவ்விரண்டு நூல்களில் அமைந்திருக்கும் வணிகவியல் மேலாண்மை கருத்துக்களை ஒப்பீட்டு ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

வணிகம்:

வணிகம் என்பது வர்த்தகம் என்றும் பொருள்படும் ;. ஒரு பொருளைப் பணத்திற்கோ மற்றும் தேவைக்காகவோ விற்பனை செய்வது வணிகம் ;. மனிதனது தேவைகளையும்இ விருப்பங்களையும் நிறைவேற்றும்இ இலாபநோக்குடைய அல்லது இலாபநோக்கற்ற ஒரு பொருளாதார செயற்பாடு ஆகும்.வணிகம் அதை நடத்துகின்ற விதத்தின் அடிப்படையில் தனியாள் வணிகம்இ கூட்டு வணிகம்இ அரசுத்துறை நிறுவன வணிகம் என பிரிக் ;கலாம்.

**வணிகர் நிலை:**

சங்ககாலம் முதற்கொண்டு வணிகத்தில் தமிழர்கள் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றனர்.இன்றும் வணிகம் முன்னேற்றப்பாதையில் செல்கிறது. சங்ககாலத்தில் சீத்தலை சாத்தனார்இ இளவேட்டனார்இ ஆயத்தனார் என்று பல வணிகர்கள் இருந்ததை அறியமுடிகிறது.அக்காலத்தில் அரசர்கள் வணிகர்களைப் பாதுகாத்து வந்தனர் என்பதை 'கூலம் பகர்நர் குடிபுறந்தராஅ' என்று போற்றுகின்றனர். திரைகடலோடியும் திரவியம் தேடு என்பது முதுமொழி. இதற்கு ஏற்ப சங்ககாலம் முதல் இன்று வரை மக்கள் வணிகம் தொடர்பாக பல நாடுகளுக்குச் சென்று பொருட்களை வாங்கியும் விற்றும் தொழிலைப் பெருக்குகின்றனர். வணிகம் நேர்மையான முறையிலும்இ நியாயமற்ற வழிகளிலும் நடைபெறுவது உண்டு. இலாப நோக்கை மட்டும் மனதில் கொண்டவர்கள் நியாமற்ற வழியிலும் இலாப நியாயநோக்கை மட்டுமன்றி சமுதாய அக்கறை உடையவர்கள் நேர்மையான வழியிலும் வணிகம் செய்கின்றனர். சமுதாய ஏற்ற தாழ்வுக்கு இதுவும் ஒரு காரணம் ;. தொழில் செய்ய முனைவோர் ஊக்கத்தோடு சோர்வு இல்லாமல் நம்பிக்கையோடு நேர்மையாக செயல்படும் போது வணிகத்தை பெருக்கி முன்னேறலாம்.

ஊக்கத்தினால் உயர்வு:

தொழில் முனைவோருக்கு தேவையான ஒன்று ஊக்கம். தனி நபருக்குக் கொடுக்கப்படும் ஊக்கம் மற்றவர்களாலோ அல்லது சில நிகழ்வுகளாலோ ஏற்படலாம். ; ஊக்கத்தோடு செயல்பட்டால் வாழ்க்கையில் தளாராத செல்வம் உண்டாகும்.

'ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா

ஊக்கம் உடையான் உழை'

என்ற குறள் தொழில் தொடங்குவோர் எவராயினும் தளர்வில்லாமல்நம்பிக்கையோடு உழைக்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறது.

மனதில் உறுதி இருக்க வேண்டும். மன உறுதி என்ற பண்பு எதையும் சாதிக்கும் தன்மையுடையது தன் மனிதனோ கூட்டு மனிதனோடு ஒன்றுபட்டு உழகை ;க வேண்டும்.தோல்வியைக் கண்டு துவண்டு போகாமல் ஊக்கத்தோடு உழைத்தால் தடைகளைத்தாண்டி செல்ல முடியும். உறுதியானது மனிதனுடைய மனம். இந்த மன உறுதிதான்! நாடோடியாக வாழ்ந்தவனை நாடாளத் தூண்டுகிறது. இந்த மன உறுதிதான் கால் நடையாக நடந்தவனை கப்பலிலும் விமானத்திலும் பயணிக்கத் தூண்டியது. இந்த மன உறுதிதான் அடிமையாக வாழ்ந்தவனை வாழத்தூண்டியது.

எனவேதான் பாரதிக் கூட மனதில் உறுதி வேண்டும் என்றார். ஊக்கத்துடன் உழைப்பவர்களுக்கு செல்வத்தால் உயர்வு உண்டு ;. உழைப்பு இல்லையேல் வறுமை வாட்டும் என்பதை விவிலியம் கூறுகிறது

'திட்டமிட்டு ஊக்கத்துடன் உழைப்பவர்களுக்கு செல்வம் சேரும் என்பது திண்ணம். பதற்றத்துடன் வேலை செய்பவர் பற்றாக்குறையில் இருப்பர்.' நீதிமொழிகள் காட்டுகின்ற பெண்

ஒரு வயலை விசாரித்து அதை வாங்குகிறாள் தன் கைகளின் சம்பாத்தியத்தினால் திராட்சத்தோட்டத்தை நாட்டுகிறாள் .தன்னை பெலத்தால் இடைக்கட்டிக்கொண்டு தன் கைகளைப் பலப்படுத்துகின்றார் என்கிறது.

குடும்பத்தில் சோர்வின்றி நாள்முழுதும் ஊக்கம் குன்றாது உழைக்கிறாள். நம்பிக்கையோடு வியாபாரத்தைத் தொடங்குகிறாள்.தன் பெலன் குறையாமல் வேலை செய்துகுடும்பத்தை கட்டி எழுப்புகிறாள் ஊக்கம் என்ற மன உறுதியோடு மனிதர்கள் வாழும் போது வெற்றி அடையமுடியும். என்பதை விவிலியம் எடுத்துரைக்கிறது. இவ்வாறாக ஊக்கமுடைய பெண் வணிகத்தில் சிறந்து விளங்குகிறதை நீதிமொழிகள் காட்டுகிறது.

**அறவழியில் சம்பாதித்தல்;:**

எப்படியும் தொழில் செய்யலாம் எந்த வகையிலும் பொருள் சேர்க்கலாம் என்ற எண்ணம் இல்லாமல் தீமையான செயல்களை நீக்கி , நல்வழிகளைக் கையாண்டு , நேர்மையான வழியைத் தேர்ந்து எடுத்து ; தொழில் தொடங்க வேண்டும்.அறம் என்றால் தருமம் புண்ணியம் என்று பொருள்படும்.மனிதன் தனக்கென வரையறுத்துக்கொண்ட ஒழுக்க முறையின் தொகுதியே முழுநிறை வடிவமே அறம்.

“அறம்ஈனும் இன்பமும் ஈனும் திறன்அறிந்து

தீதுஇன்றி வந்த பொருள்”

பொருள் தேடும் பொழுது அல்வழிகளை விடுத்து நல்வழிகளை மட்டும் எடுத்து ஆராய்ந்து அவற்றின் வாயிலாகப் பொருள் தேடின் அப்பொருளே நிலைக்கும் இன்பத்தை தரும்.அல்வழியில் வருபொருள் அழியும். மனிதர்களையும் அழிக்கும்.

“அடுக்கிய கோடி பெறினும் குடிபிறந்தார்

குன்றுவ செய்தல் இலர்”.

கோடி கோடியாகப் பொருள் பெற்றாலும் நல்ல வணிகக் குடியில் பிறந்தவர் தமக்கும் தம் குடிக்கும் குறைவும் இழிவும் தரும் செயல்களை ஒருபோதும் செய்வதில்லை.நல்வழியில் ஈட்டும் நிலைக்கும் என்பதை வள்ளுவர் விளக்குகின்றார்.

தீய வழியில் சேர்க்கும் பொருள் அழிந்து விடும் என்பதை

'வஞ்சனையால் தேடின பொருள் குறைந்துபோம் ;:கைப்பாடாய்ச் சேர்க்கிறவனோ விருத்தியடைவான்.'

விவிலியம் எடுத்துரைக்கிறது.வணிகம் செய்யும் மக்கள் உழைத்து பொருளை சேர்க்க வேண்டும் . திருட்டு வழியில் செல்வத்தை சேர்க்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றக் கூடாது. திருட்டு வழியில் சேர்ப்பது வீட்டில் தங்குவதில்லை.நிலைப்பதில்லை.

சுமுத்திரையான நிறைகோல்:

நிறைகோல் என்பது துலாக்கோல் தராசுக்கோல் என்று பொருள்படும்.தராசு ஐயம் இல்லாதபடி பொருள் அளவை நடுநிலைமையுடன் செயல்படும்.நடுவு நிலைமையைக் குறிப்பது தராசு. இது வணிகத்தின் முதன்மைக் கருவி. அடிப்படைக் கருவி தராசுபோல் வணிகர் தம்மையும் எல்லோரையும் சமமாகவே மதிக்க வேண்டும். எனவே அது வணிகக் குறியீடாக அமைகிறது.

“சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க்கு கணி.

என்கிறார் வள்ளுவர்.துலாக்கோல் முதலில் தான் சமநிலையில் அமைந்திருக்கும். பின்னர்த் தன்னிடம் வைக்கப்பட்ட பொருள்களின் எடையை மிகத் துல்லியமாகக் காட்டும். அது எப்பொருளின் பக்கமும் சாயாது.

“நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே யொழிய விடல”;.

நல்லதே ஏற்படும் என்றாலும் நடுநிலை தவறிய செயல்களை ஒருபோதும் செய்யக்கூடாது.நேர் வழியைப் பின்பற்ற வேண்டும்

'கள்ளத்தராசு கர்த்தருக்கு அருவருப்பானது. சமுத்திரையான நிறைகல்லோ அவருக்குப் பிரியம். சுமுத்திரையான நிறைகோலும் தராசும் கர்த்தருடையது பையிலிருக்கும் நிறைக்லெல்லாம் அவருடையசெயல்.

வெள;வேறான நிறைகல்லும் வெள ;வேறான மரக்காலும் ஆகிய இவ்விரண்டும் கர்த்தருக்கு அருவருப்பானவைகள்;.

பொருள்களைச் சரியான எடை போடாத , தராசுகளை சிலர் பயன்படுத்தி ; ஜனங்களை ஏமாற்றுகின்றனர்.;. கர்த்தர் பொய் அளவுகளை வெறுக்கிறார். கர்த்தர் விரும்புவதோ சரியான அளவு.

சோம்பல் :

சோம்பல் செயல்பட வேண்டிய காலத்தில் செயல்படாமல் அச்செயலை நினைத்திருத்தல்.

குடியென்றும் குன்றா விளக்கம் மடியென்னும்
மாசூர மாய்ந்து கெடும்.

பிறந்த குடிப்பெருமை என்னதான் எளிமையாக இருந்தாலும் சோம்பல் குடிகொண்டால் அது மங்கிப்போய் இருண்டு விடும். ஒருவனுக்கு தன் குடியாகிய மங்காத விளக்கு சோம்பலாகிய மாசு படிய படிய ஒளி மங்கிக் கெட்டுவிடும்.

“மடிஉளாள் மாமுகடி என்ப மடியிலான்
தாள் உளாள் தாமரையினாள்”

சோம்பல் உள்ளவன் மடியில் மூதேவி தங்கியிருப்பாள். சோம்பல் இல்லாதவன் முயற்சியில் சீதேவி தங்கியிருப்பாள்.வணிகரிடம் சோம்பல் தங்கிவிட்டால் வணிகமும் நோய்வாய்ப்பட்டு படுத்துவிடும் மறுபடி எழாது. இறுதியில் மரணம் அடையும் சுறுசுறுப்பு இருந்தால் ; வணிகம் எழுந்து நிற்கும் ,செய்யும் தொழில் வாகைசூடும் என்கிறார் வள்ளுவர்.

மனிதனை பணிகள் செய்ய விடாமல் சோம்பல் தூங்கி விழச் செய்யும். அசதியானவன் பட்டினியாயிருப்பான்

சோம்பல் ஒருவரை தூங்கிக்கொண்டே இருக்கச் செய்யும். மேலும் அவன் பசியால் வருந்துவான்.

சோம்பேறி குளிருகிறதென்று உழமாட்டான். அறுப்பிலே பிச்சைக் கேட்டாலும் அவனுக்கு ஒன்றங்கிடையாது.

சோம்பேறித்தனம் வாழ்வை முற்றிலும் கெடுக்கிறது. வறுமையையும் பெலவீனத்தையும் கொடுத்து தூங்குவதைத் தவிர வேறொன்றையும் சிந்திக்க விடாது.

சோம்பேறியே நீ எறும்பினிடத்தில் போய் அதின் வழிகளைப் பார்த்து ஞானத்தைக் கற்றுக்கொள்

எறும்பு மிகச்சிறியது.அது சோம்பேறியாக இல்லாமல் சுறுசுறுப்பாக செயல்படுகிறது.அன்றாட கடமைகளைத் திட்டமிட்டு நேரத்தை வீணாக்காமல் வேலையில் நேரத்தை சரியாக கொண்டு செல்லும் போது தொழிலில் முன்னேறி வரமுடியும். சோம்பேறியின் நிலை அவனது வாழ்க்கையில் தரித்திரத்தை கொண்டு வரும் வேலை செய்து உழைத்து வணிகத்தை பெருக்குவது எத்தனை மகிழ்ச்சி. காலம் போனால் திரும்பக் கிடைக்காது.இளமையில் சோம்பல் முதுமையில் வருத்தம் என்ற பழமொழிக்கு ஏற்ப உழைக்கும் காலத்தை வீண் செய்யும் போது முதுமையில் வறுமை வந்தடையும். எந்த தொழில் செய்ய முற்பட்டாலும் தொழில் நஷ்டத்தையே கொண்டு வரும். நாம் சோம்பலை சாம்பலாக்கி உழைக்க முற்பட்டால் உயர்வுகள் உருவாகியே தீரும் என்கிறது நீதிமொழிகள்.வெற்றி பெற விரும்பும் மனிதர்கள் சோம்பல் இல்லாமல் உழைக்க வேண்டும்.

முடிவுரை:

நாட்டின் பொருளாதாரத்தை வளர்க்கின்ற ஒரு நிறுவனம் வணிகம்.இந்த நிறுவனத்தின் வழியாக பொருளாதாரக் சமத்துவம்மேம்பாடு ஏற்பட வழி உண்டு. ஆனால் வணிகர்கள் நேர்மையாய் நீதியாய் பொருளாதாரம் சமத்துவப்படும். வணிகர்கள் ஊக்கத்துடன் சோம்பேறிதனமின்றி உழைப்பது மிக மிக இன்றியமையாதது என்பதை இக்கட்டுரை வலியுறுத்துகிறது. இக்கருத்துக்களை நீதிமொழிகள் திருக்குறள் வாயிலாக அறிவுறுத்தப்படுகிறது.

**துணை நூற்பட்டியல்:**

1.திருவிவிலியம் பொதுமொழிபெயர்ப்புஇ இந்திய வேதாகமச் சங்கம் , 206 மகாத்மாகாந்தி சாலை பெங்களூர்

2.பரிமேலழகர், திருக்குறள் திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் , லிமிடெட், சென்னை.பத்தாம் பதிப்பு 1956

3.சாமிநாதையர் உ.வே, நல்லுரைக்கோவை, சென்னை,ஆறாம் பதிப்பு 1991 பக்.40

4.பாரதியார் கவிதைகள்,பூங்கொடி பதிப்பகம், 14 சித்திரைக்குளம், மயிலாப்பூர்,சென்னை முதற்பதிப்பு 1998